இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை

இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய சபை

# பொருளடக்கம்

முகவுரை ........................................................................ 1

தொலை நோக்கு மற்றும் குறிக்கோள் ........................................................................ 2

சட்ட அடிப்படைகள் ........................................................................ 3

குறுக்கு வெட்டு கொள்கைகள் ........................................................................ 3

கொள்கை கூற்றுகள் ........................................................................ 7

வளங்களை அணுகிப்பெறல் ........................................................................ 13

அமுல்படுத்தல்கள் ........................................................................ 13

மீளாய்வு தொடர்பான ஏற்பாடுகள் ........................................................................ 13

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை

*முகவுரை*

1. அனர்த்த முகாமைத்துவத்திற்கான இலங்கையின் தேசிய நடப்பாட்சி முறையின் முக்கிய அங்கமாக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கை (கொள்கை) திகழ்கிறது. இது இலங்கையில் அனைவரையும் தாங்குகின்ற இணங்கப்பட்ட கொள்கைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகள் ஆகியவற்றை குறிப்பிடுகின்றது. 2004 சுனாமி அனர்த்தம் மற்றும் அண்மைக்கால பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தலுக்கு தடைகளாக இனங்காணப்பட்ட நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்புகள் சம்பந்தமான பிரச்சினைகள், இரட்டை செயற்பாடுகள் என்பவற்றை தடுப்பதற்கான ஓர் அணுகுமுறையொன்றை அனர்த்த முகாமைத்துவ தேசிய கொள்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2. 2004ஆம் ஆண்டு இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட சுனாமிக்குப் பின்னர் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான 2005ஆம் ஆண்டு பாராளுமன்ற தெரிவுக்குழு அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதன் பொருட்டு ஒரு தேசிய கொள்கை உருவாக்கப்படல் வேண்டும் என விதந்துரைத்திருந்தது. அவ்விதமான கொள்கைகளை அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை (சபை) உருவாக்க வெண்டுமென 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டம் (சட்டம்) குறிப்பிடுகிறது. இதனை தயாரித்த பொழுது 2006ஆம் ஆண்டுமுதல் 2016ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்காக[1] மிகவும் பாதுகாப்பான இலங்கையை நோக்கி என்ற ஆவணத்தின் (பாதை வரைபடம்) கீழ் 60 விளைவுகளை உள்ளடக்கியுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்திற்கான ஓர் செயல் முறை வழிகாட்டியாகும் (செயல்முறை வழிகாட்டி) இந்த செயல்முறை வழிகாட்டியின் பிரகாரம் சபையின் செயலகம் என்ற முறையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது சம்பந்தப்பட்ட முகவர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களிடம் இருந்து உள்ளீடுகளையும் வெளியீடுகளையும் பெற்ற நிலையில் கொள்கை ஒன்றை உருவாக்குவதன் பொருட்டு கலந்தாலோசனை செயற்பாடுகளை மேற்கொண்டது.

3. 2010 டிசெம்பர் 28ஆந் திகதி இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கொள்கையை நிறைவேற்றியது.

4. கொள்கைக்கான சட்டரீதியான அடிப்படை, இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நடப்பாட்சி முறைக்கான ஏனைய சகல முக்கிய அம்சங்களாக சட்டமே காணப்படுகிறது. ஏனைய முக்கிய அம்சங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு கொள்கை எதிர்பார்க்கின்றது. இவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும். தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் (NDMP); தேசிய

[1] 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 4வது பிரிவு

அவசரகால செயற்பாட்டுத்திட்டம், சகல அமைச்சுகளுக்குமான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்,அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், ஏனைய திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் வழிகாட்டிகள், காணி பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் சட்டங்கள், கொள்கைகள், ஏனைய விடயங்களை பொறுப்பேற்கின்ற நிறுவனங்கள் என்பவை இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விளைவுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தமது பங்களிப்பினை நல்கும்.

5. அனர்த்த இடர்களை தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் பாதுகாப்புமிக்கதாகவும் இலங்கை திகழ்வதற்கு எவ்விதமான விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலான உயர் மட்ட கூட்டாக இக்கொள்கை திகழுமென எதிர்பார்க்கப்படுகிறது. சில அம்சங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. ஏனையவற்றிற்கு மேலதிக காலமும் முயற்சிகளும் அவசியம். இக்கொள்கைக்கு வலுவூட்டும் செயல்களுக்கான விரிவான முகாமைத்துவ ஏற்பாடுகள், பொறிமுறைகள், பொறுப்புகள், நேரச்சட்டகங்கள் போன்றவற்றை தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் தாபித்துள்ளது.

6. 2010 இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வரைவுச் சட்டகமான எதிர் காலத்திற்கான தொலைநோக்கு மஹிந்த சிந்தனையுடன் இணைந்து செல்வதாக இக்கொள்கை காணப்படுகின்றது. அனர்த்த இடர்களை முறையான வகையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் தேசத்திற்கென ஓர் பாதுகாப்புடைய கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கான மையமாக இது காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட சட்டங்களை வலுப்படுத்தல், காணிகளின் பிழையான பயன்பாட்டை குறைத்தல், பொதுமக்களுக்கு பயிற்சிகளையும் விழிப்பூட்டல்களையும் வழங்குவதன் மூலம் அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புகளைக் குறைத்தல் ஆகியன தொடர்பில் பல விடயங்களை இது கோரிநிற்கின்றது.[2] மேலும் 2005 – 2015கான செயலுக்கான கியாகோ வரைவுச் சட்டகம் உள்ளடங்கலாக சிறந்த சர்வதேச நடைமுறைகளையும் அறிவிக்ககக்கூடியதாக இக்கொள்கை காணப்படுகின்றது: ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட அனர்த்தங்களில் இருந்து நாடுகளையும், மக்களையும் தாக்குப்பிடிக்கும் தன்மை மிக்கவர்களாக கட்டியெழுப்புதல் தொடர்பிலும் இது குறிப்பிடுகிறது.

### *தோலை நோக்கு மற்றும் குறிக்கோள்*

7. அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பான இலங்கையை உருவாக்குவதே இக்கொள்கையின் தொலை நோக்காகும்

8. அனர்த்தங்களில் இருந்து இலங்கை மக்களின் சொத்துக்களிள் மற்றும், சுற்றாடல் என்பவற்றை சட்டத்திற்கு ஏற்ப பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.

---

[2] மஹிந்த சிந்தனை தொலைநோக்கு 2010:7 அத்தியாயம் 7.1 பகுதி

***சட்ட அடிப்படைகள்***

9. இச்சட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருவனவற்றறை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.:

அ. அனர்த்தத்தில் இருந்து சமூகத்தையும் சுற்றாடலையும் பாதுகாத்தல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பேணிப்பாதுகாப்பதுடன் அபிவிருத்தி செய்தல்;

ஆ. தயார்நிலை, தடுத்தல், பொறுப்புக் கூறல், நிவாரணம், மீள்நிர்மாணம், புனர்வாழ்வு ஆகியவற்றின் நிமித்தம் பயனுறுதிமிக்க வகையில் வளங்களை பயன்படுத்தல்.;

இ. அனர்த்தங்களில் இருந்து தம்மை பாதுகாக்கக் கூடியவர்களாக மக்களை மாற்றும் வகையில் அவசியமான பயிற்சிகளையும், விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் மேம்படுத்தல்.;

ஈ. இடர் முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தனிப்பு நடைமுறைகளை பிரயோகித்தல் ஆகியன தொடர்பில் அனர்த்தங்களினால் பாதிப்படையக் கூடிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களது ஆற்றல்களை கட்டியெழுப்புதல்

உ. அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணங்கள், மீள் பெறுகை மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளை மேம்படுத்துகின்ற அதேவேளை அனர்த்த்திற்கு முன்னரான திட்டமிடல், தயார் நிலை, மற்றும் தணித்தல் செயற்பாடுகளையும் மேம்படுத்தல்.

***குறுக்கு வெட்டு கொள்கைகள்***

10. குறைந்தளவான அனர்த்த இடர் எனும் பொழுது அது அனர்த்தம் தொடர்பில் குறைவான பாதிப்புறும் தன்மை – அதிகளவில் தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகியவற்றை குறிக்கும். இதனை அடைவதற்கு பின்வரும் குறுக்குவெட்டுக் கொள்கைகளை கருத்திற் கொண்டு முறையான அணுகுமுறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

11. பல்வேறு நோக்கங்களை கொண்டுள்ள அனர்த்த முகாமைத்துவத்தில் பல்வேறுபட்ட மற்றும் ஒன்றோடொன்று தொடர்புபடும் பல நோக்கங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன.

அ. மனிதன், இயற்கை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்று காரணிகளிகளால் ஏற்படும் பல்வேறுபட்ட அனர்த்தங்கள் தொடர்பான பல்வேறுபட்ட அனர்த்த நேர்வுகளைக் கருத்திற் கொள்ளுதல்.

1. இயற்கை அபாயங்கள்: சுற்றாடல், உயிரினங்கள், சொத்துக்கள் முதலானவற்றிற்கு இயற்கை அனர்த அபாயங்கள் அச்சுறுத்தலாக அமைகின்றன.

11.மானிட உந்தலிலான அபாயங்கள்: இயற்கை, தொழில் நுட்பம் அல்லது இவை இரண்டிலும் மானினது தலையீடுகளால் உரவாக்கப்படும் அனர்த்தங்கள்.

111.தொழில் நுட்ப அபாயங்கள்: இயந்திரக் கோளாறுகளாலோ அல்லது மனிதனது தலையீடுகளாலோ தொழில் நுட்பம் சார்ந்து ஏற்படும் அபாயங்கள்.

ஆ. அனர்த்தங்களுக்கு முன்னரான அனர்த்தங்களின் போதான அனர்த்தங்களின் பின்னரான பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் (அனர்த்த பாதிப்புக்களை தடுத்தல், தணித்தல், முன்னாயத்தம், அவசர நிலைமைகளின் போதான செயற்பாடுகள், நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீளாய்வு என்பவற்றை மேற்கொள்ளுதல்.

இ. அத்தியவசிய சேவைகள், வளிமண்டலவியல், மானிட, சமூக சேவைகள் உட்கட்டமைப்பு வசதிகள், அறிவூட்டல் பயிற்சி, சுகாதாரம், விவசாயம், பாதுகாப்பு, நீர் முகாமைத்தவும், சூழல், காலநிலை மாற்றங்கள், நகர முகாமைத்துவம் போன்ற பல்வேறு பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.

ஈ. தேசிய மட்டத்திலான மக்கள் நிறுவனங்கள், தனியார்துறை, சிவில் சமூகம், சர்வதேச சமூகம், பொது மக்கள் முதலானோரைப் பங்கேற்கச் செய்தல்.

உ. மாத்தறை மாவட்ட, கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உட்பட இலங்கையின் ஒட்டுமொத்தமான எல்லை, தரை, கடல், வானம் உட்பட சர்வதேச பிராந்திய தேசிய பார்வைகள் உள்ளடங்கும் பல்வேறுபட்ட பிரதேசங்கள்

ஊ. குறுங்கால, நடுத்தரகால, நீண்டகால என்ற அடிப்படையில் பல நோக்குத் திட்டங்களைத் திட்டமிடலும் மற்றும் தீர்மானித்தலும்.

**12. கூட்டுப்பொறுப்பு.** அனர்த்தங்களின் அடிப்படைத் தன்மையை கருத்தில் கொண்டு நோக்குகையில் ஒரு தனி அமைப்பு மாத்திரமல்ல அனைவரும் அணிதிரண்டு அனர்த்த இடர்களை குறைப்பதற்கும், பாதுகாப்பான கலாசாரமொன்றை உருவாக்குவதற்கும் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர். குறிப்பாக:

அ. அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனம், தனியார் துறையினர் கல்வியியலாளர்கள், ஊடகம், மத அமைப்புகள், ஏனைய அமைப்புகள், தனிநபர் அனைவருக்கும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் கூட:டுப்பொறுப்பு காணப்படுகின்றது. தேசிய கொள்கை பணிப்புரைகளுக்கு அமைவாக நடந்து கொள்கின்ற அதே வேளையில் ஒருங்கிணைந்து

ஒருவருடன் ஒருவர் கலந்தாலோசித்து, கூட்டிணைந்து நடக்கக்கூடிய பொறுப்புகளும் காணப்படுகின்றன.

ஆ. அனர்த்தத்தினால் ஏற்படுகின்ற இடர்களைக் குறைப்பதற்கும் தாக்குப்பிடிக்கும் தன்மையை கட்டியெழுப்புவதற்குமான முயற்சிகளை அரச அரசசார்பற்ற நிறுவனம், தனியார் துறையினர், கல்விமான்கள்,ஊடகம், மத அமைப்புகள் மற்றும் சமூகம் என்பனமேற்கொள்ள வேண்டும்.

இ. பாதுகாப்பான கலாசாரம் சுயமாக மீண்டெழும் மனப்பாங்கு ஆகியவற்றை உருவாக்கக் கூடியதாக உற்சாகப்படுத்தக் கூடியதாக இடையீடுகள் காணப்படல் வேண்டும்.

ஈ. தேசிய மற்றும் பிராந்திய மட்ட இடர் தாக்க அளவுகளின் முன்னுரிமைக்கமைய சம்பந்தப்பட்ட அரச தாபனங்களின் ஒருங்கிணைப்புடனும்,வெளிப்படைத்தன்மையுடனும் தனியார் தாபனங்கள்,அரச தாபனங்கள்,சிவில் சமூகம் என்பன அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

உ. அரச மற்றும் தனியார் பங்காண்மைகள் முக்கியத்துவமிக்கன.

## 13. சமத்துவம், வேற்றுமை உள்ளடக்குதல்

அ. நிகழக் கூடிய ஆபத்துகள் மற்றும் னர்த்தங்கள் ஆகியவற்றின் கடும் தன்மை, பாதிப்புறும் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிறுவனங்கள் அல்லது முகவர்கள் வளங்களை இலக்கிட வேண்டும்.

ஆ. அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களது, இனம், பால் நிலை, சமய நம்பிக்கைகள், ஆற்றல்கள் அல்லது ஏனைய தனிப்பட்ட அம்சங்கள் எதுவாக இருந்தாலும் உதவிகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கான சம உரிமை அவர்களுக்கு உண்டு.

இ. ஓரங்கட்டப்பட்ட மக்கள் விசேட தேவையுடையோர் அல்லது பாதிப்புறும் நிலையில் வாழ்பவர்கள் மற்றும் அங்கவீனர்கள், சிரேஷ்ஷ்ட பிரஜைகள், நோயாளிகள், கர்ப்பினிப் பெண்கள், பிள்ளைகள், இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோர் தொடர்பில் விசேட பரிசிலனைகளை செலுத்தக் கூடியதாக அனர்த்த முகாமைத்துவம் திகழவேண்டும்.

ஈ. பால் நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தக் கூடியதாகவும், குறிப்பாக பெண் பிள்ளைகளையும், பெண்களையும் வலுவூட்டக் கூடியதை உறுதிசெய்யக்கூடியதாக அனர்த்த முகாமைத்துவம் இருத்தல் வேண்டும்.

உ. அனர்த்த நிலைமைகளின் போது பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகள் இடம்பெறுவதை தடுப்பதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஊ. விசேடமாக அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டுவதற்காக செயற்பட அதிகாரம் உள்ள நிறுவனங்களினால் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படும் என்பதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அறிவூட்டுவதற்காக தேசிய மற்றும் பிரதேச தேவைகளை உணர்ந்து அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளித்தல்

## 14. வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்

அ. குறித்த அனர்த்தத்தை உணர்வூட்டும் வகையிலும், பொறுப்புக் கூறும் வகையிலும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அதன் கீழுள்ள முகவர்களும் உருவாக்குதல் வேண்டும்.தேசிய உபதேசிய மட்டங்களில் இனங்காணப்பட்ட உணர்வூட்டல் தேவைகளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உருவாக்கும்.

ஆ. அனர்த்த முகாமைத்துவமானது சகல மட்டங்களிலும் பங்குபற்றுதல் முறை வெளிப்படைத்தன்மை பொறுப்புக் கூறக் கூடிய தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். சகல சந்தர்ப்பங்களிலும் பொறுப்புக்கூறக் கூடியனவாகவும், வெளிப்படைத் தன்மைமிக்கதாகவும் அரச நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். தேவைகளை இனங்காணல், வளங்களை பங்கிடுதல், நிதியை முகாமைத்துவம் செய்தல், சமத்துவமான சேவைகளை வழங்குதல் ஆகியனவும் இவற்றுள் உள்ளடங்கும்.

இ. அனர்த்தத்தால் பாதிப்படையக் கூடிய சமூகங்களுக்கு திட்டமிடல், தீர்மானங்களை மேற்ரொகள்ளல் நடைமுறைப்படுத்தல் மற்றும் அனர்த்தத்துடன் தொடர்புடைய மேற்பார்வை செயற்பாடுகள் முதலானவற்றில் பங்குபற்றுவதற்கும், தமது பங்களிப்பினை நல்குவதற்கும் உரிமையுண்டு. குறிப்பாக பொதுமக்கள் பங்குபற்றக் கூடிய தகவல்களை அவர்களுக்கு வழங்கக் கூடிய விதத்திலும் தம்மை தாக்குகின்ற விடயங்கள் தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாட்டில் பங்கீடுபாட்டாளர்கள் பங்குபற்றக்கூடிய விதத்திலும் அரச நிறுவனங்கள் தகவல்களை வழங்க வேண்டும்.

ஈ. ஏதாவதோரு அனர்த்தத்திற்கு முன்னர் இவ் அனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய இடர்கள் தொடர்பான தகவல்கள், சேவைகள், காணப்படும் வசதிகள் தொடர்பாகவும், அனர்த்தத்தின் பின்னர் தம்மை மீள் அமைத்துக் கொள்வதற்காக காணப்படும் வசதிகள் போன்ற தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமை பொதுமக்களுக்கும், குறிப்பாக அனர்த்தத்தினால் பாதிப்படையக் கூடிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் உண்டு. இவற்றுள் உதாரணமாக ஆவணப்படுத்தல் மற்றும் காப்புறுதி சேவைகள் போன்றன உள்ளடங்கும்.

உ. அனர்த்தத்துடன் தொடர்புடைய தகவல்களும் வழிகாட்டிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு கிடைப்பதுடன் இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

ஊ. அனர்த்த வரைபடங்கள், இடர் தோற்றப்பாட்டுக் குறிப்புகள், நவீன கருவிகள், முறைகள், ஆகியன பங்கீடுபாட்டாளர்களுடன் பகிரப்படல் வேண்டும்.

**15. மிகப் பொருத்தமான சிறப்பான நடைமுறைகள்**

அ. இலங்கையின் தேசிய சூழமைவுகளுக்கு ஒத்துப் போகக் கூடிய விதத்தில் சர்வதேச முன்னெடுப்புகள், தராதரங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்கக்கூடியதாக அனர்த்த முகாமைத்துவம் இருத்தல் வேண்டும்.

ஆ. அனர்த்த முகாமைத்துவ கருவிகளும் முறைகளும் காலத்திற்கு ஏற்றததாகவும் மிக நவீனத்துவமானதாகவும் இருத்தல் வேண்டும்.

இ. அனர்த்த இடர் முகாமைத்துவமானது பொருத்தமான சகல சந்தர்ப்பங்களிலும் உள்ளூர் மக்களது அறிவு மற்றும் பாரம்பரிய முறைகள் ஆகியவற்றை மேம்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஈ. அனர்த்த இடர் முகாமைத்துவ அணுகுமுறைகளானது பொருளாதார செலவுச் சிக்கனமிக்கதாகவும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

***கொள்கை கூற்றுகள்***

**தயார் நிலை மற்றும் பதிலளித்தல்**

16. நன்கு அறியப்பட்ட அல்லது எதிர்வுகூறப்பட்ட அவசர நிலைமைகளின் பொழுது தெளிவானதும், துள்ளியத் தன்மைமிக்கதுமான முன் எச்சரிக்கை தகவல்களை தேசிய, பிராந்திய மற்றும் சமூக மட்டங்களில் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட ஒரு தனி நிறுவனமே வழங்குதல் வேண்டும்.

அ. முன்னெச்சரிக்கை மற்றும் அவசர வகை கூறும் முறைகளானது தேசிய பிராந்திய பிரதேச சமூக மட்டங்களில் முறையாகவும் தொடர்ச்சியாகவும் இயங்குகின்றதா என பரிசோதிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆ. முன்னெச்சரிக்கை முறைகளானது பிராந்திய மற்றும் சர்வதேச வலையமைப்புகள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைக்கப்பட்டிருத்தல் வேண்டம்.

இ. சுனாமி தொடர்பான அச்சுறத்தல் எழுகின்ற பொழுது மக்களை வெளியெற்றுவதற்கான தீர்மானத்தை தொழில்நுட்ப ஆலோசனைக்குழு எடுத்தல் வேண்டும்.

17. அனர்த்தத்தின் பொழுதும் அனர்த்தத்தின் பின்னரும் சகல அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் அமைப்புகள், சமூகங்கள், தொடர்ச்சியாக தமது அலுவல்களையும் சேவைகளையும் வாழ்வாதாரத்தையும் மேற்கொள்வதை உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் அனர்த்த முகாமைத்துவ திட்டம் இருத்தல் வேண்டும்.

18. அவசரகால செயற்பாட்டு நிலையங்கள், அவசரகால அழைப்பு நிலையங்கள், ஏனைய பொறிமுறைகள் மூலம் 24 மணித்தியாலங்கள் மற்றும் 7 நாட்கள் அடிப்படையில் தேசிய மற்றும் உபதேசிய மட்டங்களில் அவசரகால சேவைகள் பொதுமக்களுக்கு கிடைக்கக் கூடிய விதத்திலான பொறிமுறைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும்.

19. அவ்விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மாத்திய அரசாங்க அமைச்சின் இணக்கத்துடன் தாக்கங்களைத் தணித்தல், நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு தயாராக சிவில் சமூகம், தனியார் துறையினர், தொண்டர் அமைப்புகள் தயாராக இருத்தல் வேண்டும்.

    அ. தொழில்நுட்பத்தினால் உயர்ந்த அல்லது அதிக உணர்வுபூர்வமான சேவைகளை அல்லது ஆபத்துக்குள்ளாகக் கூடிய அல்லது அனர்த்த பாதிப்புக்களுக்குள்ளான நபர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட தேசிய அதிகார சபைகளினால் அந்த சேவை வழங்கும் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டல் வேண்டும்.

20. பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முன்னர் அவசர பொறுப்புக் கூறும் முறைகள், திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமும் அமைச்சுக்களிடமும் இருத்தல் வேண்டும்.:

    அ. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களது தேவைகளின் அளவு அடையாளம் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள்.

    ஆ. அங்கீகரிக்கப்பட்டதும் அதிகாரமளிக்கப்பட்டதுமான தொண்டர் அடிப்படையிலான வலையமைப்பை அணிதிரட்டல்

    இ. பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய அளவிலும் பொருத்தமான முறையிலும் நேரத்திற்கு ஏற்ற வகையிலும் உணவு, நீர், சுகாதார வசதிகள், மருந்துகள், ஆலோசனை உதவிகள், குடியிருப்புகள், உடை மற்றும் ஏனைய தேவைகளை உடனடியாக வழங்குதல்.

    ஈ. சர்வதேச எல்லை நிலையங்களில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக உதவிகளைத் துரிதப்படுத்தும் போது தேசிய பாதுகாப்பையும், பொருட்கள் மற்றும் சேவைகளின் தராதரத்தையும் உறுதி செய்தல் வேண்டும்.

உ. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது அழிவடைந்த அத்தியாவசிய சேவைகளையும் பொதுப்பயன்பாட்டு வசதிகளையும் மீள்கட்டியமைத்தல்;

ஊ. அனர்த்தத்திற்கு பின்னர் எழும் சுகாதார ரீதியான பிரச்சினைகளை தடுத்தல்.

எ. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், உள்ளக இடம் பெயர்ந்தோர், காணாமல் போனோர் முதலானோர் பாதிக்கப்பட்ட அல்லது இழக்கப்பட்ட இழப்பீடுகள் தொடர்பான தகவல்களை வழங்குவதுடன், குடும்ப உறவுகளை மீள்கட்டியமைத்தல் வேண்டும்.

ஏ. காயமடைந்தவர்களை இனங்கண்டு சிகிச்சையளித்தல்

21. அனர்த்தங்களுக்கு வகை கூறும் பொழுது பின்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

அ. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் அவசியமான சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக தமக்கான கல்வியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆ. பாதிக்கப்பட்ட மக்கள் ஆரம்ப மீள்பெறுகைக் காலப்பகுதியின் பொழுது அவணப்படுத்தல் சேவைகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்ததை கட்டியெழுப்புவதற்கான துரித உதவிகளை பெற்றுக்கொள்வதுடன் சந்தை முறைகளையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஈ. இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் அவர்களது சொத்துக்கள், விசேட தேவைகளைக் கொண்ட மக்கள் ஆகியோரைக் கண்டுபிடித்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

உ. நிவாரண நிலையங்களில் தங்கியிருக்கின்றவர்கள் தொடர்ந்தும் மேலதிகமாக அங்கே தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அவ்விதமான மேலதிக ஏற்பாட்டு சேவைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

ஊ. மீள்குடியேற்றங்களை பொறுத்தவகையில் அதன் பொருட்டு நிர்மானிக்கப்படும் வீடுகள் பயனாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு கட்டப்படுவதுடன் தேசிய சட்டத்தின் பிரகாரம் அதற்கேற்ற தராதரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இவ்விதமான விடுகள் மிகவும் பாதுகாப்பான இடங்களில் மாத்திரமே கட்டப்படுதல் அவசியமாகும்.

எ. பாதிக்கப்பட்ட மக்களது உளவியல் தேவைகள் மற்றும் அனர்த்தத்திற்கு பின்னரான மன வடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவர்களுக்கான ஆலோசனை சேவைகள் வழங்கப்படல் வேண்டும். இதன் பொழுது நீண்டகால தேவைகளும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஏ. எழுகின்ற தேவைகள் மற்றும் அனர்த்தத்தினால் சமூகத்திற்கு பொருளாதாரத்திற்கு, உட்கட்டமைப்புக்கு, சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கக் கூடிய விதத்தில் அவை தொடர்பில் பொறுப்புக் கூறும் வகையில் அனர்த்த முகாமைத்தவ கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்கு விதிகள் ஆகியன இருத்தல் வேண்டும்.

**அனர்த்த இடர்களை குறைக்கும் முகமாக ஒருங்கிணைக்கப்பட்ட முறைகள்**

22. அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்யக்கூடிய விதத்தில் உறுதியான சட்ட ஆணைகள், நிறுவன ரீதியான ஆற்றல்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியன தேசிய மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களிடம் இருத்தல் வேண்டும்.

23. பல்வேறு வகையான அனர்த்தங்களுக்காக அனர்த்த குறிப்புகள், பாதிப்புறும் தன்மைகள் மற்றும் இடர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அவை முறையாக புதுப்பிக்கப்படல் வேண்டும். அனர்த்தங்களினால் பாதிப்படையக் கூடிய இடங்கள், இனங்காணப்பட்டு அவற்றின் தாக்கத்தை குறித்த தரப்பினர்கள் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

அ. அவர்த்தம், வறுமை, அபிவிருத்தி ஆகியன இடர் மதிப்பீடுகளுடன் கூட்டிணைக்கப்படல் வேண்டும்.

ஆ. விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக் கருவிகள் மற்றும் முறைகள் போன்றன அனர்த்த இடர்களை குறைக்கும் பொருட்டு பயன்படுத்தப்படல் வேண்டும்.

இ. அனர்த்த இடர் தணிப்பு செயற்பாடுகளானது காலநிலை மாற்ற இசைவாக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

24. சகல அபிவிருத்தி கருத்திட்டங்கள் திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியன அனர்த்தத்தினால் ஏற்படும் தாக்கம் மற்றும் அனர்த்த இடர் தணிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து மதிப்பிடப்படல் வேண்டும்.

அ. அனர்த்த இடரைக் குறைக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கான செலவுகள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றை நிறுவனங்கள் பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

25. அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் முகமாக கட்டிட மற்றும் திட்டமிடல் வழிகாட்டிகளை உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளும், திட்டமிடல் அதிகாரிகளும் பயன்படுத்த வேண்டும்.

அ. திட்டமிடலில் அனர்த்த இடர்களைக் குறைப்பதற்கும் கிராமிய, நகர, பிராந்திய, தேசிய மட்டங்களில் அபிவிருத்திசார் முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கும் வழிகாட்டிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. அனர்த்தங்களினால் பாதிப்புறும் நிலையில் உள்ள இடங்களில் நிர்மாணப்பணிகளை மேற்கொள்கின்ற பொழுது கட்டிடம் சார்ந்த விதிகளும்,வழிகாட்டிகளும் பயன்படுத்தப் படுவதுடன் அவை நகர திட்டமிடல், மற்றும் அபிவிருத்திக் கட்டுப்பாட்டு செயல் முறைகளில் கூட்டிணைக்கப்படல் வேண்டும்.

இ. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளும் குடியிருப்புகளும் அனர்த்தத்தை தாக்குப்பிடிக்கக் கூடிய அம்சங்களுடன் மீள்நிர்மாணம் செய்யப்படல் வேண்டும்.

ஈ. காணிப்பயன்பாடு, விருப்பம் கோராத மீள்குடியேற்றங்கள் மற்றும் புனர்வாழ்வு நெறிமுறைகளானது பௌதீக திட்டமிடல், மீள்குடியேற்றங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவை தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் வழிகாட்டிகளுக்கும் ஏற்ப அனர்த்த இடர்களை குறைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

உ. வழிகாட்டிகள், திட்டங்கள் மற்றும் உபாயங்கள் ஆகியன அனர்த்தங்களினால் பாதிப்படையக் கூடிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான காணிகளை இனங்காணக் கூடியனவாகவும் அவர்களது வாழ்க்கைமுறை, வாழ்வாதாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் அமைதல் வேண்டும்.

ஊ. அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள், தனியாருக்கு சொந்தமான உட்கட்டமைப்பு வசதிகள், சொத்துக்கள் போன்றவற்றை கட்டிட விதிமுறைகள் மற்றும் வழிகாட்டிகளில் இணங்கப்பட்டதன் பிரகாரம் புனரமைப்பதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் சிவில் சமூக அமைப்புகளுடனும் அரசாங்கம் பங்காண்மையை ஏற்படுத்தல் வேண்டும். Optimize condominium

எ. அனத்தத்த மீளமைப்பு, மீள்கட்டடுமானம் தொடர்பாக முன்வைக்கப்படும் வீடமைப்புக் கொள்கைகள், தந்திரோபாயங்களில் தேசிய விடமைப்பு கோட்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். காணிப்பயன்பாட்டிற்கு அமைய தொடரடுக்கு அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

26. இடர் சூழ்நிலையை தரப்பினர்கள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் பொருட்டு அவற்றை மாற்றுவதற்கு அல்லது பகிர்வதற்கான பொறிமுறைகள் இருத்தல் வேண்டும்.

அ. சர்வதேச நிறுவனங்கள், அரச மற்றும் தனியார்துறை நிதி நிறுவனங்களிடம் இருந்து சலுகை அடிப்படையில் நிதி ரீதியான உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை இருத்தல் வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட சொத்துகளை மீள்நிர்மாணம் செய்வதற்கும்

அல்லது அவற்றை திருத்துவதற்கும் மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏனைய மீள்பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் இடர் பரிமாற்றத் திட்டங்கள் இருத்தல் வேண்டும்.

27. பாதகமான நிலைமைகளுக்கு இட்டுச்செல்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தனிப்பட்டவர்கள் அலல்து நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கக் கூடியதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபைகள் இருத்தல் வேண்டும்.

அ. அனர்த்தங்களை தணித்தல் மற்றும் அனர்த்த ஆபத்துள்ள கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதை குறைப்பதற்காக வீடமைப்பு தொழில்நுட்பம் என்பவற்றை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

28. அனர்த்தங்கள் தொடர்பான நிதி முறைகள் செயற்திறன் மிக்க நிதி வரவு செலவு பொறிமுறை, அவசர அனர்த்த காப்புறுதி முறை ஊடாக அனர்த்தங்கள் தொடாபான சிறந்த நிதி முறைகளை ஏற்படுத்தல்.

29. அனர்த்தங்களுக்குப் பின்னரான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதிகளை உடனடியாக பயன்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்வதற்காக நிதி அனர்த்த ஆபத்து முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**கல்வி, பயிற்சி, தொழில்வாண்மை விருத்திகள்**

30. சகல மட்டங்களிலும் அனர்த்தங்களை முகாமைத்தவம் செய்கின்ற பணியாள் தொகுதியினருக்கு தமது கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் போதியளவு பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

31. பாடசாலைகள், தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் பாடத்திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவம் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். சகலவிதமான முறைசார்ந்த மற்றும் முறைசாராத கல்வி முறைமைகள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான எண்ணக்கருக்களை பிரதானப்படுத்துவதற்கும் காத்திரமிக்கதாக மாற்றியமைப்பதற்கும் தமது பங்களிப்புகளை நல்கவேண்டும்.

அ. ஆரம்பகட்ட முதலுதவிகள், இருதய ரீதியான முதலுதவிகள், அவசர முதலுதவிகள் ஏனைய அவசர நுட்பங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடியவர்களாக பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் திகழவேண்டும்.

32. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்கள் அனர்த்த இடர் குறைத்தல் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்வதை அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபைகள் உற்சாகப்படுத்தல் வேண்டும்.

அ. அனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்றவர்களது தொழில்வாண்மைமிக்க ஆற்றல்களை வலுப்படுத்தும் முகமாக அதற்கேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை கல்வி நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆ. அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிர்மாண தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

33. அனர்த்த முகாமைத்துவத்தின் பல்வேறுபட்ட அம்சங்களை பரிமாறுவதற்கான அறிவும் திறனும் ஊடகத்துறையை சார்ந்தவர்கள் மத்தியில் இருத்தல் வேண்டும்.

***வளங்களை அணுகிப்பெறல்***

34. இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கும் அரசாங்கத்திடமிருந்து நிதியை கோருவதற்கும் பங்கீடுபாட்டாளர் முகவர்களுடன் ஒருங்கிணைப்பை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்ளல் வேண்டும்.

35. இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை பொறுப்பேற்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூகம், தனியார் துறை ஆகியோர் உற்சாகப்படுத்தப்படுத்தப்படுவர்.

***அமுல்படுத்தல்கள்***

36. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிர்வாக கட்டப்பாடு, சபையின் கொள்கை ரீதியான வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கீழ் தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தலை அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெடுக்கும்.

***மீளாய்வு தொடர்பான ஏற்பாடுகள்***

37. இக்கொள்கையானது திருத்தப்படும் வரை உள்ளவாறே இருக்கும். ஒரு பிரதான அனர்த்த நிகழ்வு ஏற்பட்டதன் பின்னர், அதற்கு ஏற்ற விதத்தில் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சம்பந்தப்பட்ட கருவிகள் ஆகியவற்றை மீளாய்வு செய்து அவற்றை திருத்தும் பணியை சபை மேற்கொள்ளும்.